# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## க.பொ.த உயதரப் மாதிரிப் பரீட்சை -2020
## சித்திரக்கலை 1

மூன்று மணித்தியாலங்கள்

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி** - I

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**பகுதி - II**


➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.

➢ **அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கைகளிக்குக.


### பகுதி I

- ***வினா இல 01 - 05 வரை கீழே தரப்பட்டுள்ள* A, B, C, D, E *ஆகிய நிழற்படங்களோடு தொடர்புபட்ட வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.***
**செய்க.**


A


B


C


D


E

01) A எழுத்தினால் காட்டப்படுவது.
  1) மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட பூசகர் உருவமாகும்.
  2) ஹரப்பா நகரில் கண்டெடுக்கப்பட்ட பூசுகர் உருவமாகும்.
  3) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட மொங்கோலிய இனத்தவரின் உருவமாகும்.
  4) பூசகர் ஒருவரைச் சித்தரிக்கும் சிந்துவெளிச் சிலையாகும்.
  5) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட அரூப உருவச்சிலையாகும். (……)

02) B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள முண்டச்சிலை.
  1) மௌரியர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட, அசோக மன்னனைச் சித்திரிப்பதாகும்.
  2) மதுரா பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற அரச பரம்பரையைச் சார்ந்த ஒருவரின் சிலையாகும்.
  3) காந்தார தேசத்தில் கிடைக்கப்பெற்ற கனிஸ்க மன்னனைச் சித்தரிக்கும் ஓர் படைப்பாகும்.
  4) மதுரா குருகுலத்திற்குரிய கனிஸ்க மன்னனின் சிலையாகும்.
  5) சாதவாகனர் கால படைத்தளபதி ஒருவரைச் சித்தரிப்பதாகும். (……)

03) C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை.

1) புதிய எகிப்திய மரபுக்கமைய செதுக்கப்பட்ட சிற்பம்
2) பேரோ ஒருவரை வெளிக்காட்டுகின்ற மரபுரீதியான சிற்பம்
3) மேன்குறே என்னும் பெயரில் இனங்காணப்படும் சிற்பம்
4) கெசிறா என்னும் பெயரால் இனங்காணப்படும் சிற்பம்
5) பூஜைக்கு ஆயத்தமாகும் பாரர் ஒருவரைக் காட்டும் சிற்பம் (.......)

04) D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாரத்தின் சாரநாத் குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதி சிறந்த புத்தர் சிலையினால்,

1) குப்தர் காலத்திற்குரிய மரபு ரீதியான பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
2) புத்த பகவான் மிகதாயில் முதலாவது தர்ம உபதேசத்தினைச் செய்த சந்தர்ப்பம் வெளிப் படுத்தப்படுகின்றது.
3) புத்தபகவானின் முப்பத்திரண்டு விசேட பண்புகள் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.
4) சாரநாத் குருகுலத்தில் உருவான புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் வெளிப்படுத்தப்ப டுகின்றன.
5) புத்தபெருமானது சுயபுலனடக்கத்தை (துஸ்தரன் சிகிரியாவை) வெளிப்படுத்தப்படுகின்றது. (..........)

05) E எழுத்தினால் ஹென்றிமூவரின் ‘அரச குடும்பம்’ என்ற சிலை,

1) இயற்கையானதும் யதார்த்தமானதுமான வடிவங்கள் சமநிலையில் பயன்படுத்தித் தொகுக்கப்பட்ட சோடிச் சிலையாகும்
2) கலைஞர் தனக்கே உரித்தான வடிவங்களைப் பயன்படுத்தி செய்த மனித வடிவங்களின் நிர்மாணிப்பாகும்
3) மனித பரிமாணங்களை உருத்திரிபு செய்து நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்
4) குவிவான மற்றும் குழிவான வெளிகள் மூலம் இதன் மேற்பரப்பு தன்மை கட்டியெழுப்பட்டுள்ளது
5) மறுமலர்ச்சிக்கால சிற்பப் பண்புகளை கொண்ட பிரமாண்டமான சிற்பமாகும் (..........)

➢ ***06 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

06) ஏதேனும் பணியொன்றை மேற்கொள்ளும் நிறுவனமொன்றுக்குப் பொருத்தமான இலச்சினை யொன்றை நிர்மாணிக்கும் போது.

1) அதிக அலங்காரத் தோற்றத்தைக் கொண்டதாக வடிவங்களையும் வர்ணங்களையும் பயன்படுத்துதல் முக்கியமாகும்.
2) கவர்ச்சிகரமான தன்மையையும் சிறந்த பூரணப்பாட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3) கிரபிக் கலைக் கோட்பாடுகளுக்கமைவானதாக இருத்தல் வேண்டும்.
4) கருத்து வெளிப்படும் விதத்தில் குறியீட்டடிப்படையில் வடிவங்களையும் வர்ணங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.
5) சுவரொட்டிச் சாயத்தை இருபரிமாண முறையில் பயன்படுத்துதல் வேண்டும். (……)

07) ஏதேனுமொரு கருப்பொருளை அரூப நோக்கில் ஒருங்கிணைக்கும் போது கவனம் செலுத்த வேண்டியது.

1) யதார்ப்பூர்வமான தொகுப்புக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதிலாகும்.
2) வர்ணங்களை இருபரிமாண அடிப்படையில் பயன்படுத்துவதிலாகும்.
3) வடிவங்களின் ஒழுங்கமைப்பின் போது உயிர்ப்பான கோடுகளைப் பயன்படுத்துவதிலாகும்.
4) கருப்பொருளுக்குப் பொருத்தமான விதத்தில் ஆக்கப்பூர்வமான வடிவங்களைப் பயன்படுத்துவதிலாகும்.
5) பயன்படுத்தும் பாணிக்கு இணக்கமான கோடுகள், வடிவங்கள், வர்ணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதிலாகும். (……)

08) பின்வருவனவற்றுள் கண்டிக் கால கலைஞர்கள் பற்றிய சரியான கூற்று எது?

1) நீலகம் ஓவியப் பரம்பரைக் கலைஞர்களால் தம்புள்ள விகாரையின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.
2) கண்டிய ஓவியங்கள் பலவற்றை சித்திர நைத்தே என்ற கலைஞரே வரைந்துள்ளார்.
3) தெகல்தொருவ விகாரையின் அனைத்து ஓவியங்களையும் தெவரகம்பொல சில்வத்தன என்ற கலைஞர் வரைந்துள்ளார்.
4) தேவேந்திர மூலாச்சாரி கட்டடக்கலையைவிட ஓவியக்கலையில் கைத்தேர்ந்தவராவார்.
5) தெல்மட மூலாச்சாரியார் கண்டிக் காலத்தில் வாழ்ந்த அதிசிறந்த ஓவியராவார்.

(……)

09) காந்தார தேசத்தில் உருவான மதுரா கலையானது.


1) மேலைத்தேய கலைச் செல்வாக்கினால் உருவானதாகும்.
2) கிரேக்க, பௌத்த கலப்பு மரபாகும்.
3) தேசியத்துவத்தை எடுத்துக்காட்டும் கலை மரபாகும்.
4) கணிஸ்க மன்னனால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.
5) மகாயான பௌத்த சிந்தனைக்கமைய உருவானதாகும். (……)


10) மலைநாட்டு சித்திரங்களாலும் சிற்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள தம்புள்ள விகாரை.


1) வலகம்பாகு அரசன் காலத்தில் கட்டுவிக்கப்பட்ட விகாரைளிடையே சித்திரங்கள் காணப்படும் ஒரேயொரு இடமாகும்.
2) விசாலமான கூரைச் சித்திரம் காணப்படும் நிலையமாவதுடன் மாரபராஜ, கவிசி விவறணம் ஆகிய சித்திரங்களும் அவற்றிடையே உள்ளன.
3) ஐந்து குகைகளைக் கொண்டுள்ளதுடன் சித்திரங்கள் காணப்படுவது இரண்டாவது குகையான பெரிய குகையில் மட்டுமேலாகும்.
4) புத்தசிலைகள் அதிகம் காணப்படும் ஒரேயொரு இடமாகும்.
5) மலைநாட்டு குகை விகாரைகளிடையே சித்திரமும் சிற்பங்களும் காணப்படும் ஒரேயொரு இடமாகும். (…..)

**வினா இல 11 - 15 வரை கீழே தரப்படும் $P, Q, R, S, T$ எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.**


P


Q


R


S


T

11) P இனால் காட்டப்பட்டுள்ள ஆக்கம்

(1) கோகுல் குகையில் வரையப்பட்டுள்ள எருதின் ஓவியம்
(2) லஸ்கோ குகையில் வரையப்பட்ட இறந்த மனிதனும், காயப்பட்ட எருதையும் காட்டும் ஓவியம்
(3) அல்ராமீராக் குகையில் வரையப்பட்ட மாட்டின் ஓவியம்
(4) யானையின் ஓவியம்
(5) பொன்டிடுகோமோ குகையில் வரையப்பட்ட யானை ஓவியம் (.......)

12) Q என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள ஓவியம்

(1) அருபவாதியான ஜக்சன் பொலக்கின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(2) அருபவாதியான வஸ்லி கன்திஸ்கியின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(3) கனவடிவவாதியான பிராக்கின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(4) கனவடிவவாதியான பிக்காசோவின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(5) அருபவாதியான பியற் மொன்றியனின் ஆக்கங்களில் ஒன்றாகும்

13) R எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தினால் சித்தரிக்கப்படுவது,
(1) இயற்கைப் பொருட்கள் உருத்திரிபுபடுத்தி வரையப்பட்டுள்ளமையாகும்.
(2) கோட்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது செய்யப்பட்ட வெளிப்பாடாகும்.
(3) உலோகத்தினாலான பொருட்களை வளையக்கூடிய பொருட்களாகக் காண்கின்றமையாகும்.
(4) கலைஞரொருவரின் மனக்குழப்பத்தைக் காட்டும் வெளிப்பாடாகும்.
(5) நனவு நிலைக்கும் கலைஞருக்கும் இடையிலான கனவுரீதியான உரையாடலாகும். (…..)

14) S எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சித்திரத்தில் காணக்கிடைப்பது,
1) ஐரோப்பிய சாஸ்திராலய கலைப்பண்புகளாகும்.
2) ஐரோப்பிய யதார்த்தவாத நுட்பமுறைகளாகும்.
3) மனப்பதிவாத முறைமை, இந்திய கலைப்பாணி ஆகியவற்றின் கலப்பாய் அமைந்ததொரு பண்பாகும்.
4) கீழைத்தேய கலை எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட பணியாகும்.
5) இந்திய கலைக் கோட்பாடுகளைப் பின்பற்றியதொரு பாணியாகும். (……)

15) J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்த ஓவியர் பற்றிய சரியான கூற்று யாது?
1) அசைவுடன்கூடிய சந்தர்ப்பங்களை சித்தரிப்பதில் திறமைமிக்கவராவார்.
2) வேகமான தூரிகைத் தடங்களை தனது நிர்மாணிப்புக்களில் சேர்த்த கலைஞராவார்.
3) ஒன்றுக்கொன்று வேறுபட்ட வர்ணங்களின் சேர்க்கையில் திறமைமிக்கவராவார்.
4) பின்புல வெளிச்சித்திரிப்புக்காக குறைந்தளவு முக்கியத்தவம் வழங்கிய கலைஞராவார்.
5) பல்வேறு கோணங்களில் அவதானம் செலுத்துவதில் திறமை மிக்கவராவார். (……)

- ***16 தொடக்கம் 20 வரையான ஓவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க***

16) நடனக் கலையில் மதிப்புமிக்க நடனமான கோலாட்ட நடனத்தைச் சித்திரிக்கும் பெறுமதிமிக்க செதுக்கல் காணப்படுவது
1) கடலாதெனிய விகாரையின் அடித்தளத்தில்
2) யாப்பகுவ கற்சுவரில்
3) எம்பக்க தேவாலய மரச்செதுக்கலில்
4) இலங்காதிலக விகாரையின் வெளிப்புறச் சுவரின் மணியுருக்கட்டு (பொரதம்) நிரைகளுக் கிடையில்
5) பொலநறுவை வைஜந்தி மாளிகை அடித்தளத்தில் (..........)

17) கண்டி யுகத்திற்குரிய தெகல்தொருவ விகாரையில் உள்ள யமனை வெற்றி கொள்ளல் எனப் பெயர் பெறும் ஓவியத்தின் விசேட அம்சம்
1) பூமித்தாயின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
2) யமனின் புத்திரர்கள் உருவம் காட்டப்பட்டிருத்தல்
3) வாளைக் கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
4) துப்பாக்கியை கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
5) ஐந்து தலையுடன் யமன் காட்டப்பட்டிருத்தல் (..........)

18) கட்புலக் கலையின் யதார்த்தச் சித்திரிப்பு (Realism) என்பது
1) சாஸ்திராலய அடிப்படை விதிகளைப் பின்பற்றுதலாகும்.
2) தூரதரிசனக் கோட்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்துதாகும்.
3) விருத்தியுற்ற அழகியல் கோட்பாடுகளுக்கமைய மனித உருவங்களைச் சித்தரித்தலாகும்.
4) இயற்கையில் காணப்படும் உயிருள்ள, உயிரற்றவற்றின் பண்புகளை உள்ளவாறே சித்தரித்தலாகும்.
5) அழகியல் கோட்பாடுகளுக்கமைய அனைத்தையும் சித்திரித்தலாகும். (…....)

19) அனுராதபுர மகாமெவுனா பூங்காவில் காணத்தக்க தூபிகளுள்,
1) வலகம்பா மன்னனால் கட்டுவிக்கப்பட்ட அபயகிரி தூபி மகாமெவுனா பூங்காவில் முதன் முதலில் அமைக்கப்பட்ட தூபியாகும்.
2) மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட ஜேதவனாராம தூபி செங்கற்களினாலான உலகின் மிக உயர்ந்த கட்டடக்கலை நிர்மாணிப்பாகும்.
3) மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட ஜேதவனாராம தூபி செங்கற்களினாலான உலகின் மிக உயர்ந்த கட்டடக்கலை நிர்மாணிப்பாகும்.
4) தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்ட தூபராம மணிவடிவில் அமைந்த ஒரேயொரு தூபியாகும்.
5) துட்டகைமுனு மன்னனால் முதன் முதலில் அமைக்கப்பட்ட ருவான்வெலிசாயவிற்குப் பதிலாக சத்தாதிஸ்ஸ மன்னனால் அமைக்கப்பட்ட தூபியே இன்று காணக்கூடியதாக உள்ளது. (……)

20) பாரதத்தில் குப்தர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கலைவகைகளின் காரணமாக.
1) பௌத்த கலை நிர்மாணிப்புகள் பதியதொரு பாதையை நோக்கிச் சென்றன.
2) மதுரா கலை போஷிக்கப்பட்டதுடன் புதியதொரு கலைமரபு உருவாகியது.
3) பாரதத்தின் பௌத்த கலை நிர்மாணிப்புக்களின் பொற்காலம் தோற்றம் பெற்றது.
4) கலை நிர்மாணிப்புகள் யதார்த்தவாதத்திலிருந்து விடுபட்டு விழுமியரீதியானவையாக மாற்றமுற்றன.
5) பௌத்த கலை வெளிநாட்டுப் பண்புகளிலிருந்து விடுபட்டு சுதேசியத்தன்மைக்கு மாற்றம் பெற்றது.

(……)

❖ **21- 25 வரை கீழே தரப்படும் L,M,N,O,P எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**


L


M


N


O


P

21) L எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்.
1) ரவீந்திரநாத் தாகூர் 2) அபனீந்திரநாத் தாகூர் 3) நந்தலால் போஸ்
4) ஜெமினி ரோய் 5) அம்ரிதா ஷேர்கில் (…………..)

22) M எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இவ்வோவியத்துக்கு ஹரி பீரிஸ் வழங்கியுள்ள பெயர்.
1)நாயகி 2) டி சேரம் 3)இந்திராணி
4)சேலைகட்டிய பெண் 5) மாயாதேவி (…………..)

23) N எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்.

1) றிச்சர்ட் கேப்ரியேல் 2) மஞ்சுஸ்ரீ 3) ஸ்டேன்லி அபேசிங்க
4) ஜே. டீ. ஏ. பெரேரா 5) ஜஸ்டின் தொனியகல (…………..)

24) O என்ற ஓவியத்தின் படைப்பாளி.
1) வின்சட் வான்கோ 2) பீலிங் 3) ஐவன் பீரிஸ்
4) பிக்காசோ 5) மாற்கு (…………..)

25) P என்ற ஓவியத்தின் காலப்பகுதி
1) மறுமலர்ச்சிக் காலப்பகுதிக்குரியது 2) கிரேக்க காலப்பகுதிக்குரியது
3) உரோம காலப்பகுதிக்குரியது 4) குப்த காலப்பகுதிக்குரியது
5) எகிப்திய புதிய இரசதாணி காலப்பகுதிக்குரியது (…………..)

- ***26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னே தரப்படும் கலைப்படைப்பை அடப்படையாக கொண்டு தெரிவு செய்க***



26) 19 ஆம் நூற்றாண்டில் இறுதியில் பிரபல்யம் பெற்ற பாணிக் கமைய இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது. இது வெளிப்படுத்தும் பாணி
1) இம்பிரிசம் 2) போஸ்ட் இம்பிரிசம்
3) கியூபிசம் 4) போவிசம்
5) சர்ரிலிசம்

(……)



27) இங்கு காட்டப்பட்டுள்ள இந்துக் கோயில்
(1) 13ம் நூற்றாண்டில் பாண்டிய கட்டடக்கலை இயல்புகளுக்கமைய கட்டப்பட்டதாகும்.
(2) 11 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும்.
(3) வானவன்மாதேவி என்ற அரசியால் பொலன்னறு வையில் கட்டப்பட்டதாகும்.
(4) சோழர்களின் கட்டடக்கலை இயல்புகளுக்கமைய 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.
(5) கலிங்கமாகனால் கட்டப்பட்ட இந்துக் கோயிலாகும்.

(……)

( ......)



28) இச்சிலை காணப்படுவது
(1) பொலன்னறுவை அலாகன பரிவெனா வளவினுள் காணப்படுகின்ற சிலையாகும்.
(2) பொலன்னறுவை கல்விகாரையின் சமாதி புத்தர் சிலையாகும்.
(3) பொலன்னறுவை பபலு விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள புத்தர் சிலையாகும்.
(4) பொலன்னறுவை வட்டதாகேயில் காணப்படுகின்ற புத்தர் சிலையாகும்.
(5) பொலன்னறுவை லங்காதிலகவுக்கு அண்மையில் காணக்கூடியதான சிலையாகும்.


( )

29) இங்கு காட்டப்பட்டுள்ள வில் வளைவு



(1) உரோமர்கள் தமது கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காக மேற் கொண்ட நிர்மாணிப்பாகும்.
(2) உரோம சிற்பக்கலையின் பெருமையை எடுத்துக் காட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வில் வளைவாகும்.
(3) உரோமப் பேரரசனொருவனின் யுத்த வெற்றிக் குறிப்புகளை உள்ளடக்கிய செதுக்கல்களைக் கொண்ட வீதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்ட வில் வளைவாகும்.
(4) உரோமாபுரியில் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குச் செல்வதற்கான நுழை வாயிலாகக் கட்டப்பட்டதாகும்.
(5) உரோமப் பேரரசர்களால் தமது நகரங்களை அலங்கரிப்பதற்காகக் கட்டப்பட்டதாகும். (.......)

30) அருகில் காட்டப்படுவது



(1) எகிப்தில் தீபஸ்சிஸ் காணப்படும் எட்பூ தேவஸ்தானம்
(2) விசாலமான தூண்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட ஒரேயொரு தேவஸ்தானம்
(3) சூரிய தெய்வத்திற்குக் கட்டப்பட்ட லக்சோ தேவாலயம்
(4) ராம்சேஸ் அரசனுக்காகக் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயம்
(5) ஹோறஸ் தெய்வத்தின் பொருட்டு கட்டப்பட்ட தேவாலயம்

(........)

- ***31 தொடக்கம் 35 வரையான ஓவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க***

31) கணினியொன்றின் துணையுடன் அழைப்பிதழ் ஒன்றை நிர்மாணிக்கும் போது அத்தியாவசியமானது,
(1) அடிப்படை மாதிரியை வர்ண ஓவியமொன்றாக வரைந்து கொள்ளலாகும்.
(2) கிரபிக் நிர்மாணிப்புகளுக்குப் பொருத்தமான மென்பொருளொன்றைத் தெரிவு செய்தலும் அதன் பயன்பாடு பற்றிய அறிவுமாகும்.
(3) நிர்மாணிப்புக்குத் தேவையான வரைபடங்களையும் எழுத்துக்களையும் தெரிவு செய்தலாகும்.
(4) கருத்து வெளிப்பாடு ஏற்படும் விதமாக கணினியில் புதிய மாதிரியொன்றைக் கட்டியெழுப்பிக் கொள்ளலாகும்.
(5) அழைப்பிதழின் பிரதியொன்றை கணினிக்கு உள்ளீடு செய்து மேலதிக பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாகும். (…….)

32) பாருத் கல் வேலியின் கற்பலகைச் செதுக்கலின் மூலம் அதிகமாகப் புலப்படுத்தப்படுவது.
(1) புத்தரின் வாழ்க்கை சார்ந்த நிகழ்வுகளாகும்.
(2) ஜாதகக் கதைச் சம்பவங்களாகும்.
(3) வரலாற்றுச் சம்பவங்களாகும்.
(4) போதித்தவரை விலங்குகளாகக் காட்டும் ஜாதகக் கதைச் செய்திகளாகும்.
(5) மனித உருவங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும்.

(.......)

33) பொலனறுவைக் கல்விகாரை எனப்படும் உத்தரராம,
(1) இயற்கையில் கற்பாறைகள் அமைந்துள்ள தன்மையைப் பயன்படுத்தி அவற்றின் பிரமாணங்களுக்கமைவாக நான்கு சிலைகள் செதுக்கப்பட்டுள்ள இடமாகும்.
(2) மரபுகள் சிலவற்றின் கலப்பினைக் கொண்டு நிருமாணிக்கப்பட்ட நான்கு சிலைகளைக் கொண்ட ஸ்தானமாகும்.
(3) தென், இந்திய பல்லவச் சிற்பிகளால் செதுக்கப்பட்ட நான்கு சிலைகளைக் கொண்ட ஸ்தானமாகும்.
(4) புத்தரின் மூன்று நிலைகளையும் காட்டக்கூடிய இடமாகும்

(5) புத்தர் சரிதையின் நான்கு சந்தர்ப்பத்தை செதுக்குவதற்கு கொண்ட முயற்சியாகும். (…...)

34) புத்த சரிதையின் முக்கிய நிகழ்வை விளக்குகின்ற "நளகிரி யானையை அடக்குதல்" என்னும் செதுக்கல் இயற்கைப்பாங்கான முறையில் செதுக்கப்பட்டிருப்பது

(1) அமராவதி சைத்தியத்தின் தகட்டு செதுக்கலாகும்.
(2) சாஞ்சி ஸ்தூபத்தின் தூணில் காணப்படும் செதுக்கலாகும்.
(3) எல்லோரா பௌத்த விகாரையான தோதால் குகைச் செதுக்கலாகும்.
(4) காந்தார கற்பலகை செதுக்கலாகும்.
(5) பாரூத் சைத்திய கல்வேலியில் கிடைக்கப் பெற்ற செதுக்கலாகும். (…...)

35) புராதன வரலாற்று மனிதன் குகைச் சித்திரம் வரையும் பொழுது பிராணிகளின் வடிவங்களை வரைய அதிக அவதானம் செலுத்தி இருப்பது,

(1) தினந்தோறும் காணுகின்ற பிராணிகளின் நடத்தைகளால் கவரப்பட்டமையால் எனலாம்.
(2) பிராணிகளின் நடத்தைகள் பற்றிய சிறந்த விளக்கம் கிடைக்கப் பெற்றிருந்தமையால் எனலாம்.
(3) பிராணிகளின் வடிவத்தை வரைந்து வைப்பதால் தனிமை, வெறுமை அகன்று போகும் என நினைத்தால் எனலாம்.
(4) பிராணிகளின் வடிவவை வரைந்து வைப்பதால் அதுபோன்ற பிராணியால் நமக்கு தீங்கு ஏற்படாது என நினைத்ததால் எனலாம்.
(5) தாம் வசித்த குகைகளை அழகுபடுத்த முற்பட்டமையாகும். (…...)

➢ **36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படத்தைத் தொடர்புபடுத்தி கேட்கப்படும் வினாக்களிற்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36) இவ்வோவியத்தின் படைப்பாளி.

1) சர்வதோர் டாலி 2) ப்ரீடா காலோ 3) ஜெமினி ராய்
4) வஸ்லி கன்திஸ்கி 5) ஜோர்ச் பிராக்

37) இவ்வோவியத்தின் தொனிப்பொருள்.

1) சம்பாசனையில் ஈடுபட்டிருத்தல். 2) ஐக்கியமடையும் இதயங்கள்
3) பெண்கள் இருவர் 4) நற்பின் அடையாளம்.
5) ப்ரீடா காலோ இருவர்

38) இவ்வோவியம் வெளிப்படுத்தி நிற்கும் ஓவிய மரபு.
1)மனப்பதிவு வாதம் 2) பின்மனப்பதிவு வாதம் 3) கனவடிவ வாதம்
4) மீ யதார்த்த வாதம் 5) அரூப வாதம்.

39) வரையப்பட்ட ஊடகம்.
1) நீர் வர்ணம் 2) பஸ்ரல் வர்ணம் 3) எண்ணெய் வர்ணம்
4. இயற்கை வர்ணம் 5. கலப்பு வர்ணம்

40) இவ்வோவியத்தின் சிறப்பான வெளிப்பாடாக அமைவது,
1) கலைஞரின் அழகிய வர்ணச் சேர்க்கையாகும்.
2) யதார்த்தவாத பண்புகளை வெளிப்படுத்த முனைந்தமை.
3) மனித உருவங்களினூடாக கருத்தை வெளிப்படுத்த முற்பட்டமையாகும்.
4) கலைஞர் தனது மனப்பாதிப்பினை ஓவியத்தில் பதிவு செய்ய முற்பட்டமையாகும்.
5) கலைஞர் புதிய முயற்சியொன்றை ஏற்படுத்த முனைந்தமையாகும்.